**பலாகல பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஜூன் 12 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூலை 12 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பலாகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | குடி நீர் வழங்கல் திட்டத்திற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா. 1,335,843 பெறுமதியான நீர்த்தாங்கி மற்றும் ஓரச்சுசர் நிர்மாணம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக இனங்காணப் பட்டு கணகீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதிய திகதியில் நிர்மாணக் கடன்கொடுத்தோர் பெறுமதியில் 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு ரூபா 869,950 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய மீதிகளாக இருந்தது. | இம்மீதிகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் வேண்டும். | எதிர் காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iii) | வாகன பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 128,100 பெறுமதியான இயந்திரங்கள் உபகரணங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக இனங்காணப் பட்டு கணகீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். எதிர் காலத்தில் நிலையான சொத்துக்களாக உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஊழியர் பிணை வைப்புக்கள் ரூபா 81,708 ஆன பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒதுக்கப்பட வேண்டும். | சரியான பெறுமதி இனங்காணப்படாமை காரணமாக நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை தெரிவிக்கின்றேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது மோட்டர் கேடர் இயந்திரம் மற்றும் மண் பதப்படுத்தும் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமைக்காக இரண்டு நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 63,600 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மோட்டர் கேடர் இயந்திரம் மற்றும் மண் பதப்படுத்தும் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது அறவிடப்படவில்லை யெனவும் எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா. 61,257,990 பெறுமதியான கணக்கு விடயமொன்றுக்குரிய உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது அதனை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் போனது | தேவையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓட்டநிலைமையில் உள்ள 15 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கான எரிபொருள் தகனம் தொடர்பான பரிசோதனை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தல் இடம்பெற்றிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் பரகாரம் செயற்படல் வேண்டும். | வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் இயந்திரத்தினைப் பொருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI2002/02 இலக்க திரைசேரி சுற்றறிக்கை | கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான புறம்பாக நிலையான சொத்து பட்டியலொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணினி தொடர்பான பதிவேடொன்று நடாத்திச் செல்லப்படுவதுடன் அது சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக மீண்டும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,870,343 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,466,979 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,180,000 | 1,439,560 | 1,439,560 | 67,600 | 1,002,000 | 1,187,026 | 1,187,026 | 67,600 |
| (ii) | வாடகை | 2,192,000 | 1,750,830 | 1,880,496 | 63,600 | 1,933,000 | 1,659,825 | 1,564,159 | 193,266 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 310,500 | 342,430 | 342,430 | - | 400,500 | 284,303 | 284,303 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 6,902,300 | 8,836,092 | 15,592,296 | 9,245,012 | 4,802,300 | 10,756,639 | 3,434,977 | 16,001,216 |
| | மொத்தம் | 10,584,800 | 12,368,912 | 19,254,782 | 9,376,212 | 8,137,800 | 13,887,793 | 6,470,465 | 16,262,082 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்து வரும் நிலுவையான வீதவரி ரூபா 67,600 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும் | இந்நிலுவை வீதவரி பழைய நிலுவையாக இருந்ததுடன் எதிர்காலத்தில் அம்மீதிகளை தீர்வுசெய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,237,682 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 1,007,330 ஆக இருந்தது. | முத்திரைக் கட்டணங்கள் நீதிமன்ற தண்டப் பணத்தை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணங்கள் நீதிமன்ற தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் | பதிலளிக்கப்பட்டிருக்கவி ல்லை. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்து அதனடிப்படையில் வருடாந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பலாகல பிரதேச சபை அதிகாரப் பிரதசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் ஹிங்குருவெல்பிட்டிய பிரதேசத்தில் மஹவெலி காணி யிலும் பலலுவெவ காட்டிலும் அமைந்துள்ள காணியில் வகைப்படுத்தப்படாமல் அகற்றப்பட்டிருந்தது. | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய கழிவுப் பொருட்கள் ஹிங்குருவெல்பிட்டிய மற்றும் பலலுவெவ ஆகிய இடங்களில் வகைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் |

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 செப்தம்பர் 01 ஆந் திகதிய 2034/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் பிளாஸ்ரிக் அடங்கியுள்ள கழிவுப் பொருட்களை திறந்த வெளியில் எரிக்ககூடாத போதும் சபையினால் சேகரிக்கப்படும் அனைத்து கழிவுப்பொருட்களும் இரண்டு இரண்டு இடங்களில் அவ்வப்போது எரிக்கப்பட்டிருந்தன. | அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிளாஸ்ரிக் பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டமொன்று மூலம் குறைத்துக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடடிக்கை எடுக்கப்படும் |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை அறிந்து வைத்திருக்கவில்லை. | இந்நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கான சுற்றறிக்கை அறிவுறத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் சுற்றாடலைப் பாதுகாத்தல், சுகாதார மற்றும் சுகநலன் வசதிகள் என்பவற்றை மேம்படுத்தல் பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி போன்றவற்றிக்காக பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு செய்யப்பட்டு அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையிடமுள்ள 15 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் | வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் | வாகனங்களுக்காக சகல வருமான அனுமதிப் பத்திரங்களையும் |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொள்ளப்பட வேண்டும். | பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | சபையிடமுள்ள 05 வாகனங்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய திகதியில் காப்புறுதி சான்றிதழ் பெறப்பட வேண்டும். | வாகனங்களுக்காக காப்புறுதி சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 07 பதவிகளுக்காக 08 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | வெற்றிட பதவிகளை நிரப்பி நிதி மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்த வேண்டும். | காப்படும் வெற்றிடங்கள் தொடர்பான அறிக்கையொன்று 3 மாதங்களுக்கு ஒருமுறை உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அவ்வெற்றிடங்கள் காரணமாக சபையின் நாளாந்த செயற்பாடுகள் விடுபட்டு வந்தன. |
| (ஆ) | 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 305,790 ஆன ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை வளவில் உள்ள பழைய L 200 வகையான கெப் வண்டியொன்று இனங் காணப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் இனங்காணப்பட்டு பதவேடுகளக்கு உட்படுத்த வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய ரூபா 16,304,603 பெறுமதி யான மோட்டார் வாகனங்கள் மற்றும் 07 இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி இனங்காத முடியாத 02 டேலர்களின் உரித்து சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் உரித்தினை ஐகயேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ஆ) | சபைக்குரிய ரூபா 490,000 உழவு இயந்திர டேலர்கள் மற்றும் இரண்டு நீர் பவுசர்கள் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப் பட்டிருந்தன. | அந்த வாகனங்களை பதிவுசெய்து ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |

### 3.4.3 பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 1,542,228 பெறுமதி யான கட்டிடமொன்று சபை பெறுமதி இனங்காணாத 03 கட்டிடங்கள் என்பன பயன்பாடற்று காணப்பட்டன. | இச்சொத்துக்களை பயனுள்ள செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தவுதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ஆ) | சபைக்குரிய NCRD 9442 ஆம் இலக்க டிராக்டர் மீளாய்வாண்டில் 1.5 மீற்றர் மணித்தியாலம் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தி குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இச்சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பயனபடுத்துவதற் கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை |